Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 29 (12 - 06 - 1991) புதன்கிழமை ஓசை: 114

## முத்தமிழ் விழா ஒட்டி சிற்ப ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் முத்தமிழ் விழாவை ஒட்டி யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சிற்ப ஓவியக் கண்காட்சி ஒன்று இன்று மாலை மூன்று மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

இந்தக் கண்காட்சியில் மரபு ஓவியங்களில் நவீன ஓவியங்கள் வர்ண (6 ஆம் பக்கம் பார்க்க)

### நிபந்தனையற்ற ரீதியில் சிறிலங்கா அரசுடன்

# ஐரோப்பிய நாடொன்றில் பேச்சு நடத்தத் தயார்

## ஏ. எப். பி. செய்தியாளரிடம் திலகர்

(மணிலா)

எவ்வித முன் நிபந்தனையுமின்றி சிறிலங்கா அரசுடன் இந்திய, ஐரோப்பிய நாடுகளின் மத்தியஸ்தத்துடன், ஐரோப்பிய நாடொன்றில் வைத்து நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. திலகர் ஏ. எப். பி. செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதனை ஜேர்மனியிலிருந்து தொலைபேசியில் செய்தியாளரிடம் பேசியபோது திலகர் தெரிவித்ததாக வெரித்தாஸ் நேற்றிரவு குறிப்பிட்டது.

மேலும் அச்செய்தியில் ராஜீவ்காந்தியின் கொலையை அடுத்து எவ்வித ஆதாரமுமின்றிப் புலிகளைக் குற்றம் சுமத்துவது கூடாது என்று சொல்லியும், கொலையில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த விரும்பவில்லையெனவும் இலங்கை அரசின் வெளியுறவுத்துறைச் செயலர் பிரட்மன் வீரக்கோன் கூறியிருப்பதை திலகர் குறை கூறியுள்ளார்.

ராஜீவின் கொலையோடு புலிகள் எந்தவிதத்திலும் சம்பந்தப்படவில்லை என்பதோடு இலங்கை அரசு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வராமல் இருக்க கையாளும் தந்திரமே (6 ஆம் பக்கம் பார்க்க)

### தபால்களைச் சேர்க்கவும்

(ஈச்சமோட்டை)

பருத்தித்துறையில் இருந்து குமண கப்பல் கொழும்பு நோக்கி இன்று புதன்கிழமை பிற்பகல் செல்ல இருப்பதால் நேற்றுக் காலை பிரதம தபாலகத்தில் இருந்து வாகனம் மூலம் வெளியூர் தபால் பொதிகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இன்று காலையும் தபால் பொதிகள் கொண்டு செல்லப்படுவதால் காலை 10 மணிக்கு முன்பாக தபால்களை தபாலகத்தில் சேர்க்குமாறு தபாலக வட்டாரம் தெரிவித்துள்ளது. (43)

### பாஷையூர் அந்தோனியார் பெருநாள்

(ஈச்சமோட்டை)

பிரசித்தி பெற்ற பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த பெருநாள் நாளை வியாழக்கிழமை திருச்சொரூப வைபவத்துடன் நிறைவுபெறும். காலை 5மணிக்கு 1 ஆவது, 2 ஆவது திருப்பலி பூசைகள் இடம் பெறும். 7 மணிக்கு யாழ். ஆயர் தலை (6 ஆம் பக்கம் பார்க்க)

### சங்கானை இளைஞர் சவூதியில் மரணம்

(வவுனியா)

சங்கானைப் பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் சவூதி அரேபியாவில் வீதி விபத்தில் மரணமானார்.

குட்டியன் செவ்வந்திநாதன் என்ற வாலிபர், மே மாதம் (6 ஆம் பக்கம் பார்க்க)

### சர்வகட்சி மாநாட்டில்

## இணக்கம் இல்லாவிடில் மாற்றுவழி நாடப்படும்

- பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

அனைத்துக்கட்சி மாநாட்டின்மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காணுவதில் இணக்கம்காணப்படாது (6 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் இராணுவம் சுட்டு இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு தங்கியிருந்த இளைஞர் ஒருவரைக் கடந்த வாரம் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

கருங்காலியைச் சேர்ந்த மயிலன் என்ற இவ்விளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாகக் கொழும்பில் இருக்கும் இவரது உறவினர்களுக்குக் கடற்படையினர் (6ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் பயணியிடம் பணம் பறிப்பு

(வவுனியா)

வட பகுதி இளைஞனிடம் தாண்டிக்குளம் தடைமுகாம் அருகில் வைத்து எண்ணாயிரம் ரூபா பணத்தைச் சிறிலங்கா இராணுவம் கொள்ளையடித்தது.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து வட பகுதிக்கு வந்த வட்டுக்கோட்டையைச்சேர்ந்த வே. கருணானந்தசிவம் என்ற இளைஞனிடமே பணம் கொள்ளையடிக்கப்பட்டது. (6 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோருக்கு மூன்று கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தின் பல பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கு இம்மாதமும் மூன்று இலவச நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இம் மாதத்திற்காக சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் நிவாரணம் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. 'இ' (6 ஆம் பக்கம் பார்க்க)

## மாட்டு வண்டியில் ஏற்றுவதானால்நிவாரணம்

(வவுனியா)

வவுனியா நகரிலிருந்து கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாட்டு வண்டியில் ஏற்றி நிவாரணப் பொருள்கள் கொண்டு செல்ல முடியுமா என்று வவுனியா அரசாங்க அதிபர் கூட்டுறவுச் சங்க அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி கூட்டுறவுச் சமாஜத்திற்கு போதிய லொறிகள் இல்லாத காரணத்தினாலும் இருக்கின்ற சில லொறிகளுக்கு தேவையான அளவில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மூன்று நிலைகளில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் விடுதலைப்புலிகள் பல்வேறு இடங்களில் மோதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் பன்னிரண்டு மணியளவில் செங்கலடி, கரடியனாறு ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பிற்பகல் இரண்டு முப்பது மணியளவில் மயிலவெட்டுவான் என்னும் இடத்தினூடாக வரும்போது விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலால் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியப்பற்றை வளர்க்கும் கல்வியே வேண்டும்

- துணைவேந்தர் துரைராஜா

(யாழ்ப்பாணம்)

போர்க்காலச் சூழ்நிலையில் மக்கள் நானாந்தம் உணவுப் பிரச்சினை, மருந்துப் பிரச்சினை, குண்டுப் பிரச்சினை போன்ற பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இன்றைய இந்நிலையில் இப்படியான விழாக்களை எடுப்பது மிகப் பொருத்தமானது. இவ்வாறு நேற்று மாலை நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள மாவீரர் கலை அரங்கில் 6 வது நாள் முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அ. துரைராஜா அவர்கள் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தமது மண்ணையும் மக்களையும் சிந்தியாது தமது சுய நலன்களுக்காக வெளிநாடு சென்று அங்கே தமது சேவையை வழங்குகிறார்கள்.

இவர்கள் தமது மண்ணின் தேவையை உணர்ந்து விரைவில் தமது மண்ணிற்கு சேவை செய்ய வருவார்கள் என எதிர்பார்க்கிறேன். இவர்க (6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆறாம் நாள் முத்தமிழ் விழாவில்

## பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டனர்

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் விழாவின் ஆறாவது நாள் நிகழ்ச்சிகள் நேற்று மாலை நெல்லியடி மாவீரர் கலையரங்கில் மிகவும் கோலாகலமான முறையில் நடைபெற்றது.

நெல்லியடிப் பகுதி மின்விளக்குகளின் அலங்காரங்களால் இந்திரலோகம் போல் காட்சி அளித்தது. பெருந்தொகையான பொதுமக்கள் கடலலை போல் திரண்டு வந்திருந்தனர். அவர்களின் முகங்களில் எல்லையில்லாத மகிழ்வும், நம்பிக்கையும் தெளிவும் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

மாலை 6-30 மணியளவில் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு அர்ச்சனா அவர்கள் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்து இவ்விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து அர்ச்சுனா அவர்களால் மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டது. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து மங்கள இசை நிகழ்ச்சியாக தவில் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் (6 ஆம் பக்கம் பார்க்க)

சீரிளமைத் தமிழன்னை செழுமையதை
பாரிலுள்ளோர் வியந்து நின்று பாராட்ட
போரில்திறன்காட்டும் புலிப்படைக்கு நேரில்லைக்
கலை வார்க்க எனக்காட்டி
பேர் கொள் விழாவுக்கு வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

வரி விளம்பரம்

**சாக்கு விற்பனை**

கழிவு சாக்குகள் தொகையாக விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் சமாசத்தில் சாக்குகளைப் பார்வையிட்டு 1991.06 14 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் கூறு விலையைச் சமர்ப்பிக்கவும். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (B/2657)

**விற்பனைக்கு**

எனது வியாபாரஸ்தாபனமும் அது அமைந்துள்ள காணியும் கடன் வசதியுடன் விற்பனைக்கு உண்டு. முகவரி, நவரத்தினம் முருகேசு, களபூமி, காரைநகர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, ந. முருகேசு, இல. 318, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (R/1453)

**ஜீவிதா**

தொழில் நுட்பக் கூடம்

ரீவி, டெக், றேடியோ, மணிக்கூடு, றிவைண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும், விற்பனையாளர்களும், வீடியோ வீடில் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும் (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடச் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (B/2653)

## புவியியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியல் கழகத்தினரால் பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்தில் இன்று ''யாழ்ப்பாணக்குடா நாட்டின் உருவவியல்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கொன்று சிரேஷ்ட விரிவுரையாளர் B இராஜேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றது.

## அத்தாட்சிகாட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ், இந்துக்கல்லூரிமாணவன் ந. ரூபகுமாரினால் நகை, பணம் அடங்கிய மணிபர்ஸ் ஒன்று நேற்று முன் தினம் நாவற்குழிச்சந்தியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாதம்' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

## நியமனம்

(பருத்தித்துறை)

பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபராக திரு. சிவகுருநாதன் திருவாகரன் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக செல்வி ரீ. தனுஷாவும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபராக திரு எஸ் சேதீஸ்வரனும் நியமனம் பெற்றுள்ளனர். (25)

## மதிமகன் கொழும்பில்


(கொழும்பு)

இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் தேடப்பட்டு வந்த மதிமகன் என்ற எஞ்சினியர் கொழும்பில் இந்தியப் புலனாய்வுப் பிரிவினரை சந்தித்ததாகவல் வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

தான் காஞ்சிபுரத்தில் எஞ்சினியர் படிப்பு படிப்பதாகவும் ஆனால் தேடப்படும் நபர் தான் இல்லை என்றும் நிரூபித்துள்ளாராம்.

# நினைவு கூருகின்றோம்...

1991 · 06 · 12





**லெப். அர்ச்சுனா** (சதாசிவம் தமிழரசுவரன் அத்தியடி)

**அத்தார்** (தர்மலிங்கம் யசோதரன் கற்குளம்)

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் இங்கினியாகலையில் அம்பாறை காவற் படையினரால் கொலை செய்யப்பட்ட 5 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மாந்தையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த

லெப். அர்ச்சுனா (சதாசிவம் தமிழரசுவரன் - அத்தியடி, யாழ்ப்பாணம்)

இதே ஆண்டு மூதூர் மகிந்த புரத்தில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 19 தமிழ் மக்கள்.

1987 ஆம் ஆண்டு தம்பலகாமத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 6 விவசாயிகள்,

இதே ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலினால் உயிரிழந்த 3 தமிழ் மக்கள்.

இதே ஆண்டு வீரமரணமடைந்த

※ தருமன் (தாமோதரம் தங்கராசா-ஈச்சிலம்பற்றை)

1988 ஆம் ஆண்டு வவுனிக்குளத்தில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது தனக்குத்தானே கைக்குண்டை வெடிக்க வைத்து வீரமரணமெய்திய

அத்தார் (தர்மலிங்கம் யசோதரன் - கற்குளம்)

1989 ஆம் ஆண்டு வவுனியா சின்னக்குளம் பகுதியில் தேசவிரோதிகளால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்து கொல்லப்பட்ட

※ வன்னி (நாகலிங்கம் - கல்மடு, இரணை இலுப்பைக்குளம்)

※ மாமா (வேலாயுதம் நாகரத்தினம் - முல்லைத்தீவு)

※ ஜய /அர்ச்சுனன் (ச. விக்னேஸ்வரன் - இலக்கம் 26, வீட்டுத்திட்டம், புளியங்குளம்)

※ சாம் (ராமச்சந்திரன் - காத்தார்குளம், மன்னார்)

※ செல்வம் (நா. சிவபாலன் - இரணை இலுப்பைக் குளம்)

※ குணபாலன் (பெரியதுவம், கனகராயன்குளம்)

இதே ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட விழிசிட்டியைச் சேர்ந்த பொது மகன்.

1990 ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

மேஜர் நேசன் (பஞ்சாட்சரம், அரசடி வீதி, மட்டக்களப்பு)

துரை (பெரியதம்பி வடிவேல் - காயன்குடா)

ருசியன் (தம்பிராசா குலேந்திரன் - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை)

கும்புறுமூலை இராணுவமுகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த

கப்டன் கோடீஸ்வரன் (குமாரசாமி சிவமூர்த்தி - கிரான்)

கப்டன் வாமன் (வேல்முருகு யோகராசா - சந்திவெளி)

லெப். ஜெமீன் (முஸ்தபா - ஓட்டமாவடி)

குயிலி (சகாதேவன் தங்கவேல்-இலுப்பையடிச்சேனை)

ராஜா (சிவனேசன் - மயிலம்பாவெளி)

கடாபி (நல்லையா சுரேசன் - வந்தாறுமூலை)

நேரு (நவரத்தினையா சுவேந்திரன் - கொடுவாமடு)

பிரபா (கண்ணதாசன் - கிரான்)

ஜனகன் (தம்பிஐயா ஜெகநாதன் - கிரான்)

பீற்றர் (பூபாலபிள்ளை சந்திரகாந்த் - ஒலுவில்)

தௌபீக் (இஸ்மாயில் - ஓட்டமாவடி)

பழனி (அற்புதராசா - முறக்கொட்டாஞ்சேனை)

ஜெகதீசன் (லோகநாதன் - அரசடி வீதி, மட்டக்களப்பு)

கல்குடா முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

சிவா (சதாசிவம் நகுலன் - வாழைச்சேனை)

சசிக்குமார் (வாழைச்சேனை)

கல்முனை முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

வின்சன் (கல்முனை)

ஜெயராஜ் (கல்முனை)

திருக்கோவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

முகிலன் (சண்முகநாதன் யோகநாதன் - கோயிற்போரதீவு)

சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

திலீபன் (புல்லுமலை)

விலேந்திரன் (கந்தசாமி தயாகரன் - வெல்லாவெளி)

ஜெகநேசன் (கிருஷ்ணபிள்ளை சேதுராசா - அலியார் வெட்டை)

மட்டக்களப்பு கார்மேல் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்த கன்னியாஸ்திரிகள், மாணவிகள் உட்பட 7 தமிழர்கள்.

கல்குடாவில் விமானக்குண்டு வீச்சினால் உயிரிழந்த 30 தமிழர்கள்.

கல்முனையில் சிறிலங்காப் படைகளின் நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட 7 வயதுச் சிறுமி உட்பட 4 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

※ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள், ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி**

(B- 2656)

## நிருபர்கள் தேவை

### செய்தித்தகவல் மையம்

செய்தித்தகவல் மையம், யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவை அலுவலர் பிரிவுகள் தோறும் நிருபர்களை நியமனம் செய்து வருகின்றது.

க. பொ.த. சா/த அல்லது உ/த சித்தியடைந்த அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தகைமையுடைய செய்தி சேகரிக்கும் ஆற்றலும், எழுத்தாற்றலும் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. நிருபர்களுக்கு போக்குவரத்துச் செலவுட்பட செய்தித் தகவல்களுக்கான பணம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தத்தமது பகுதிக் கிராமசேவை அலுவலரிடம் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:

பொதுமக்கள் தமது பிரச்சினைகள், பாதிப்புக்கள் குறித்து எழுத்துமூலம் நேரில் சமர்ப்பிக்கலாம்.

நிர்வாகி,
செய்தித்தகவல் மையம்,
கோப்பாய்.

(B-2654)

## அறிவித்தல்

சுகாதார உதவியாளராக பயிலுநர்கள் தெரிவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுள் தகைமை உடையவர்களுக்கு 24-06-91/ 25-06-91 திகதிகளில் இப்பணிமனையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது. இவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர். ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(B-2663)

உலக வங்கி, யு. எஸ். எயிட் திட்டத்தில் நிகழ்ந்த

# வடபகுதி குளங்கள் புனரமைப்பு

# வேலைகள் யாவும் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

உலகவங்கி மற்றும் யு எஸ். எயிட் உதவித் திட்டத்தின் கீழ் யாழ் பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தினல் மேற்கொள்ளப்பட்டு வந்த நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைக்கும் வேலைகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் 1-3 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட கிராஞ்சிக்குடா நீர்ப்பாசனக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் 40 வீதம் பூர்த்தியடைந்த நிலையிலும் 1.5 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட பல்லவராயன்கட்டு நீர்ப்பாசனக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் 53 வீதம் பூர்த்தியடைந்த நிலையிலும், 1.6 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட வாரிவம்பிட்டி நீர்ப்பாசனக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் 82 வீதம் பூர்த்தியடைந்த நிலையிலும், 1·7 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட முட்கொம்பன் குளத்தின் புனரமைப்பு வேலைகள் 27 வீதம் பூர்த்தி அடைந்த நிலையிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும் உலக வங்கியிடம் போதிய பணம் இல்லை என்பதாலும் மேற்படி திட்டங்களை நிறுத்தும்படி சுற்றுநிருபத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அத்துடன் 2 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட கரியாலை நாகபடுவான் நீர்ப்பாசனக் குளத்தின் புனரமைப்பு வேலைகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனல் இத்திட்டங்களினால் பெறக்கூடிய முழுப்பயனையும் விவசாயிகள் இழந்துள்ளனர் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஒரு போத்தல் கசிப்பிற்கு 75,000 ரூபா அபராதம்

(கொழும்பு)

கொழும்பில், ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு 75,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லக்ஷ்மன் சில்வா என்ற நபர் ஒரு போத்தல் கசிப்பை வாட்பிளேசில் வைத்துக்கொண்டு டஸ்ஸிற்காக நிற்கையிலேயே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். பின்னர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு 75,000 ரூபா இவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. வாட்பிளேசில் இதற்கு முன்னர் நூறுமுறை கசிப்பு பிடிபட்டதும் குறிப்பிடத்தக்கது.



## கை கொடுங்கள்!

உங்கள் குழந்தையின் வளமான எதிர்காலத்திற்கு கைகொடுங்கள்!!

அதற்காக இன்றே ஷப்றாவுடன் இணைந்து சேமியுங்கள்

நிதித் துறையில் நேசக்கரம் நீட்டும் நண்பன்

## ஷப்றா

யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

2, ஆர். எல். டி. மெல் மாவத்தை,
கொழும்பு 04.
தொலைபேசி எண் - 508087-90

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B/2652)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும்

## முத்தமிழ் விழா

### ஏழாம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: நெல்லியடி 'மாவீரர் கலை அரங்கம்'
நாள் : 12 – 06 – 1991 புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 5. 30 மணி

★ 5. 30 – 6. 15 மங்கள இசை :
நாதஸ்வரம்: திரு. பி. எஸ். பிச்சையப்பா
திரு. பி. ரஜீந்திரன்
தவில்: திரு. பி. ரவீந்திரன்
திரு. எஸ். ராமு

★ விடுதலைப் புலிகளின் திறப்புரை.

★ சிறப்புரை: கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

★ வழக்காடு மன்றம்:
பொருள்: "பாரதியின் கனவை நனவாக்கத் தவறிய காரணத்தால் குற்றவாளிக்கூண்டில் ஈழத்தமிழர்கள்"
நீதிபதிகள்: வித்துவான் சி. குமாரசாமி
திரு. இ. ஜெயராஜ்
புலவர் ஈழத்துச் சிவானந்தன்

| தொடுப்பவர்கள்: | மறுப்பவர்கள்: |
| --- | --- |
| திரு ரி. சிக்மாரன் | திரு. பொன் கணேசமூர்த்தி |
| திரு தி திருநந்தகுமார் | திரு. வேலாயுதம் |

★ இசைக் கச்சேரி:


| | |
| --- | --- |
| திரு. எஸ். குமாரசாமி | பாட்டு |
| திரு. எஸ். மோகிதாஸ் | வயலின் |
| செல்வன் கே. துரைராஜா ... | மிருதங்க |
| திரு. எஸ். வேல்மாறன் ... | க |

★ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய மாவீரர் நாள் இலக்கியப் போட்டிகளுக்கான பரிசளிப்பு.

★ உசன் மாணவர் அமைப்பினர் வழங்கும் "மீண்டும் எழுவோம்" நாடகம்.

★ தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கும் "நாளை விடியும்" நாடகம்.

## 128 ஆவது நாள் நினைவு



வீரவேங்கை

## லெப்டினன்ட் ஜேம்ஸ்

(கந்தையா ஜெயக்குமார்)

அராலி.

| வீரஜெனனம்: | வீரமரணம் : |
| --- | --- |
| 10-01-1971 | 05-02-1991 |

கண்ணால் நல்லதையே பார்த்தாய்
காதால் நல்லதையே கேட்டாய்
வாயால் நல்லதையே பேசினாய்
அதனால் தமிழீழத்திற்காக மரணத்தையும்
வீரமாய் தழுவிக்கொண்டாய்!

இவருடன் தச்சன்காட்டுப் பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்ட தாயக மீட்பு முயற்சியின்போது வீரமரணம் அடைந்த 25 வேங்கைகளையும் நினைவு கூருகிறோம்.

– குடும்பத்தினர், நண்பர்கள்.

(B-2660)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தமிழரசுவரன் ஆகியது

04

04

1960

அமரராகியது

12

06

1986



## லெப். அர்ச்சுனா (ஆர். பி. ஜி.)

(சதாசிவம் தமிழரசுவரன்)

அர்ச்சுனாவாகியது 28 - 10 - 1983

முத்தமிழ்விழா எடுக்கும் – போரில்
முதிர்ச்சிபெற்ற வரிப்புலியே!
எத்திசையும் உன் புகழ் பரவட்டும்
எதிலும் உன் ஆற்றல் வளரட்டும்
நித்தம் நீதிகேட்டு வருவோரை நீதியாய் நடத்த வேண்டும்
நிராதரவாளருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்

சுத்தமாய் மனம் இருத்தல் வேண்டும்
சுரண்டிப் பிழைப்போரைத் தூரத்தே வைத்தல் வேண்டும்
பித்தலாட்டம் கலவாதிருக்க வேண்டும்
பிரபாகரன் ஆணையுடன் எதையும் செய்ய வேண்டும்
அத்தனை மறவாது காரியம் ஆற்றவேண்டும்
ஆற அமர யோசித்துத் தெரிந்ததையே பேச வேண்டும்!

அத்தன் - இறைவன், தந்தை,
முதிர்ச்சி – திறமை

46, அத்தியடி புதுவீதி.
யாழ்ப்பாணம்.

– பெற்றோர்,
சகோதரங்கள்

R/1451

### இந்தனைக்கு

கொள்கை அளவில் ஒன்றை ஏற்றுக் கொள்வதாக நீ கூறினால், அதைச் செயற்படுத்த உனக்குச் சிறிதும் உத்தேசமில்லை என்று பொருள்.

— ஒட்டோவ் பொன் பிஸ்மார்க்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12 06 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 035-2839 நிர்வாகபீடம்: 2308
த.பெ.எண் 05


## ஐ.நா. மனித உரிமைகள் குழுவில் சிறிலங்கா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சிறிலங்காவிற்கு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு சிறிலங்காப் பிரதிநிதி இந்த ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகிக்கவுள்ளார்.

இலங்கையில் 1971 ஆம் ஆண்டு ஜே. வி. பி. கிளர்ச்சி ஏற்பட்டதில் இருந்து மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கத் தொடங்கின. இந்நிலை எண்பதுகளில் உச்சநிலை அடைந்தது. 1988, 1989 ஆம் ஆண்டுகளில் சிறிலங்கா ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட அல்லது கடத்தப்பட்ட 60,000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அதேபோல் தமிழ் பிரதேசங்களிலும் பல ஆயிரக் கணக்கான மக்கள் சிறிலங்கா இராணுவத்தினால் கொல்லப்பட்டுள்ளனர்; ஆயிரக்கணக்கில் சிறை வைக்கப்பட்டனர்.

சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை பல தடவை தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியதோடு இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துடன் கருத்து மோதல்களிலும் ஈடுபட்டது; உலகின் பல பகுதிகளிலும் உள்ள வேறும் பல மனித உரிமை ஸ்தாபனங்களும், கண்டனங்களை வெளியிட்டிருந்தன.

இதேபோன்று, ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நாடுகளும் பெரும் கண்டனங்களை வெளியிட்டதோடு, சிறிலங்காவிற்கான தமது உதவி தொடர்ந்தும் கிடைக்கப் பெற வேண்டுமானால் மனித உரிமைகள் விடயத்தில் சிறிலங்கா சரியாக நடந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்திருந்தன. இவற்றோடு உலக திருச்சபை போன்ற சமய ஸ்தாபனங்களும் மனித உரிமைகள் தொடர்பாக கண்டனங்களை வெளியிட்டிருந்தன.

அதேவேளை எழுபதின் பிற்பகுதியில் இருந்தே சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளோ, அன்றி சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளோ இலங்கைக்குள் வர சிறிலங்கா தடையும் விதித்திருந்தது. பல அழுத்தங்கள் காரணமாக இத்தடைகள் அண்மைக் காலத்தில் தளர்த்தப்பட்டதாயினும் சர்வதேச மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வருவதற்குத் தற்பொழுது தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்பொழுது தமிழர் பிரதேசங்களில் செயற்படும் மனிதநேய ஸ்தாபனங்களின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்த அல்லது அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் மறைமுகமாகவும், நேரடியாகவும் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதற்கு பிரான்ஸ் நாட்டு வைத்தியக்குழு மீதான சிறிலங்கா விமானப் படையினரின் தாக்குதலும் அது தொடர்பாக ஆராய்ந்த தனிநபர் ஆணைக்குழுவின் அறிக்கையும் சிறந்ததொரு சான்றாகும்.

எம். எஸ். எப். வைத்தியக் குழுவினரின் மீதான தாக்குதலை விசாரித்த தனிநபர் ஆணைக்குழு ஹெலிக்கொப்டர் விமானிகளுக்கு தொலைநோக்குக் கண்ணாடி அவசியம் வழங்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்துள்ளது. இதன் பிரகாரம் விமானப் படையினரின் செயலை நியாயப்படுத்த தனிநபர் ஆணைக்குழு முனைந்துள்ளது. அதாவது உயரத்தில் பறக்கும் ஹெலிக்கொப்டர்கள், விமானங்கள் என்பனவற்றிற்கு தரையில் உள்ளவற்றை அடையாளம் கண்டறிதலில் ஏற்பட்ட சிரமமே இதற்குக் காரணம் என நியாயம் கற்பிக்க முற்பட்டுள்ளது.

இந்நிலையில் சிறிலங்கா பிரதிநிதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெறுவதென்றால் அதன் அர்த்தம் என்ன? மனித உரிமைகள் தொடர்பாக உலக நாடுகள் தெரிவித்த கண்டனங்களின் உண்மை நிலை என்ன? கண்டனங்கள் சம்பிரதாயபூர்வமானவை செயலுக்குகந்தவையல்ல என்பது அவற்றின் தீர்மானமா? அல்லது மனித உரிமை மீறல் சகல நாடுகளுக்கும் பொதுவானதொரு அம்சம் என்று அர்த்தமா? அவ்வாறாயின் அதைப்பற்றி ஏன் பேச வேண்டும்?

அதேவேளை, சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களும் மனிதநேய ஸ்தாபனங்களும் சிறிலங்காவிற்கு வழங்கப்பட்ட இப் பிரதிநிதித்துவத்தை வன்மையாகக் கண்டிக்க வேண்டும் அல்லது முதலாம் உலக நாடுகளின் 'ஏஜெண்டுகள்' என்று இம்மனிதநேய ஸ்தாபனங்களின் மீதுள்ள குற்றச்சாட்டுக்களை இவை நிரூபிப்பதாக அமைந்துவிடக்கூடும்.

## வவுனியா கிராமங்களில் நோயினால் மக்கள் அவதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து ஒரு வருட காலமாக வைத்திய வசதிகள் பாதிப்படைந்துள்ள காரணத்தினால் நோயாளர்களும், திடீர் சுகயீனக்காரர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா மாவட்ட பிரதான வைத்தியசாலை செயற்படுகின்ற போதிலும் கிராமப்புற நோயாளர்கள், இராணுவத்தின் கெடுபிடியினால் உடனுக்குடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாத நிலை நீடிக்கிறது.

வவுனியா மாவட்டத்திலுள்ள பிரதேச வைத்தியசாலைகள் மருந்துப்பொருள் பற்றாக்குறையினாலும், அரச படையினரின் தாக்குதல் நடவடிக்கைகளினாலும் சீராக செயற்பட முடியாத நிலை தொடர்கிறது.

இவை சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும், வேறு அமைப்புகளிடமும் புகார் தெரிவிக்கப் பட்ட போதிலும் எதுவித பலனும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், வவுனியா நகரப் பகுதியிலிருந்துகிராமப்புறங்களுக்கு ஊசிகள் மற்றும் தடுப்பூசி போன்ற மருந்துப் பொருள்கள் எடுத்து வருவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது. (தி)

## புதன் மட்டும் வரவும்

(நல்லூர்)

பொதுமக்கள் செயலகத்தின் புனர் வாழ்வுப் பகுதிக்கு புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் வருகை தருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு செயற்றிட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதனின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

புதன்கிழமை மட்டும்பொதுமக்கள் வருகை தந்து தமது கருமங்களைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கருத்தரங்கு

(நல்லூர்)

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க ஆதரவில் கே. எஸ். குகதாசன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி. ப. 3.30 மணியளவில் கடல் நீர் வாழ் உயிரியலின் எதிர்கால வாய்ப்புகள் என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

மேற்படி கருத்துரை யாழ் பல்கலைக் கழக பௌதிகவியல் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

## குறைந்த கட்டணத்தில் அனுமதி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம் பொதுமக்களின் நலனுக்காக குறைந்த கட்டணங்களில் வைபவங்களுக்கு வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானத்தை அதன் நிர்வாகம் எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒருலட்சம் இறப்பு; 3 லட்சம் காயம்

(வாஷிங்டன்)

வளைகுடாவில் ஆறு வார காலம் நீடித்த போரில் ஒரு லட்சம் ஈராக்கிய இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் மூன்று லட்சம் இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் அமெரிக்க பாதுகாப்பு புலனாய்வு ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட சில தகவல்களின் அடிப்படையில் இதனை மதிப்பிட்டதாக பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்திய பொதுத் தேர்தலில் 2ஆம் கட்ட வாக்குப் பதிவு

(டில்லி)

லோக்சபா மற்றும் சட்டப் பேரவைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்கெடுப்பு இன்று நடைபெறுகின்றது. 13 மாநிலங்களிலும், இரண்டு யூனியன் பிரதேசங்களிலும் உள்ள 113 லோக்சபாத் தொகுதிகளில் வாக்களிப்பு நடைபெறும்.

இதேதினம் கேரள மாநில சட்டப் பேரவையின் 139 தொகுதிகளுக்கும் வாக்களிப்பு இடம்பெறும்.

இன்று நடைபெறும் வாக்களிப்பில் கேரளம், கர்நாடகம், கோவா, பீகார், அருணாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், நாகலாந்து, மகாராஷ்டிரம், மணிப்பூர், மேகாலயா, ராஜஸ்தான், திரிபுரா, மிஸோராம் ஆகிய மாநிலங்களிலும் தாமன்டியு, டாடராநாகர் ஹவேலி யூனியன் பிரதேசங்களிலுமுள்ள பத்துக் கோடியே அறுபது லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் கலந்து கொள்கின்றனர்.

மேஜர் ஜெனரல் தேவநாயகத்தின் கொலை

## கொலையாளி தன்னிலை அற்ற நிலையில் ஏற்பட்டது

(கொழும்பு)

தந்தை மேஜர் ஜெனரல் தேவநாயகத்தையும், தாய் சரோஜினியையும் கொலை செய்ததாகச்சந்தேகிக்கப்படும் தினேஷ் சம்பவத்தின்போது தன்நிலை இழந்த நிலையில் இருந்தாரென்று வைத்திய அறிக்கை கூறுகின்றது.

தாய், தந்தை, நந்தனா என்ற இராணுவ உதவியாளன் உட்பட மூன்று கொலைகளை ஒரே தடவையில் செய்ததாகக் கருதப்படும் தினேஷ் சம்பவத்தின்போது மெய்மறந்த நிலையிலிருந்தார் என்று அங்கொடை ஆஸ்பத்திரி உளவள நிபுணர் டாக்டர் பி. வைத்தியசேகரா மவுண்ட்லேவினியா நீதிபதி பி. விஜயசிங்காவுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சம்பவதினம் பி. ப. 2 மணியிலிருந்து தினேஷ் மகாசோன என்ற தேவதை வழிபாடு தொடர்பான பாடல்களைக் கொண்ட நாடாக்களைக்கேட்டுக் கொண்டிருந்தார் என்றும் அவர் நினைவற்ற நிலையில் செய்வதை அறியாது கொலைகளைப் புரிந்திருக்கலாம் என்றும் வைத்திய அறிக்கை தெரிவிக்கின்றது.

மகாசோன வழிபாட்டில் அவர் கடந்த ஆறு மாதங்களாக ஊறிப்போயிருந்தார் என்றும் தேவதைக்கு இரத்தப் பலி கொடுக்க வேண்டுமென்றொரு மனோநிலையைப்பெற்றிருந்தார் என்றும் அறிக்கை கூறுகின்றது.

உருவேறிய நிலையில் கொலைகளை தினேஷ் செய்திருக்கலாம். ஆனால் அவர் ஒரு மனோவியாதிக்காரர் அன்று என்று சாட்சியங்களிலிருந்து தெரியவருகின்றது. நீதிமன்ற விசாரணைக்குத் தோற்றக் கூடிய மனோநிலை அவருக்கு இருப்பதாகவும் வைத்திய அறிக்கை தெரிவிக்கின்றது.

## புலிகள் புலனாய்வுப்பிரிவின் தலைவர் மீது சந்தேகமாம்

(கொழும்பு)

ராஜீவ் காந்தியின் மரணம் தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுத்துறையினரால் சந்தேகிக்கப்படும் நபர் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைத் தலைவர்தான் என கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இவர் ஜக் என்ற பெயரையுடைய ஒற்றைக் கண்ணுடையவரென நாகைபட்டினத்தில் கைதான சங்கர் என்பவர் தெரிவித்துள்ளார் எனவும் அந்தச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இதே நேரம் சென்னையில் ஆஷா ஆஸ்பத்திரியில் தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருக்கும் இளம் பெண் மீதும் இந்திய புலனாய்வுப் பிரிவு சந்தேகித்துள்ளதாம்.

அத்துடன் ராஜீவின்மரணத்தோடு தொடர்புடையதாக கருதப்பட்டு பத்திரிகைகளில் படங்கள் வந்த அந்தப் பெண் பரத்தனைச் சேர்ந்தவர் என்றும் கொழும்புப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## புலிகளைத் தேடிய பொலிஸார் மூவர் காயம்

(கொழும்பு)

பதுளையில் புலிகளைத் தேடப்போய் தங்களையே பொலிஸார் சுட்டுக் கொண்டனர்.

பதுளை மாஸ்பின்ன காட்டில் புலிகள் வந்துள்ளனர் என்று வந்த வதந்திகளை அடுத்து பொலிஸ்படை ஒன்று அந்தக் காட்டை சல்லடை போட்டுத் தேடியது.

இத்தேடுதலின் போது பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் இருந்த தன்னியக்கத் துப்பாக்கி வெடித்ததால் மூன்று பொலிஸ் அதிகாரிகளும் ஒரு ஊர்காவல் படையினரும் படுகாயத்துக்குள்ளாயினர்.

## பெரிய சதித்திட்டத்தின் பகுதியே ராஜீவ் கொலை

ராஜீவ் காந்தி கொலை மிகப் பெரிய சதித்திட்டத்தின் ஒரு பகுதியென அ.இ.அ.தி.மு.க பொதுச்செயலர் செல்வி ஜெயலலிதா குற்றம்சாட்டி இருக்கிறார்.

இந்த சதியில் வெளி நாட்டவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற வாய்ப்பையும் ஒதுக்கித் தள்ளி விடமுடியாது என்று நேற்றுச் சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார்.

# எல்லை மீட்கப் போராடும் புலிகள் ஒரு குடும்பம் போன்றவர்கள்

\- யோகி

(சாவகச்சேரி)

எமது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு குடும்பம் போன்றது அதிலும் சாதாரண குடும்பங்களை விடவேறுபட்ட தனித்துவமான குடும்பம்;

சாதாரண குடும்பங்களில் வீட்டின் எல்லைகளுக்கு சண்டை பிடிக்கும் பழக்கமும், மாமனுக்கும் மருமகனுக்கும், அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையிலும் சண்டை பிடிப்பதும் வழக்கமாக இருக்கின்றது ஆனால் விடுதலைப் புலிகளாகிய நம் நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுவதற்காக ஒன்று சேர்ந்து போராடுகின்றோம்.

இவ்வாறு சாவகச்சேரியில் இடம் பெற்ற முத்தமிழ் விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சியின் போது தலைமை உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு.யோகி கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது எமது மக்களில்பலருக்கு எமது தலைவர் உயிருடன் இருக்கின்றாரா என்று சந்தேகம் இருந்து வந்துள்ளது. மாத்தயாவுக்கும், பிரபாகரனுக்குமிடையிலான சண்டையின் போது தலைவர் இறந்ததாகவும், கிட்டு இவரை சுட்டுவிட்டதாகவும் பல்வேறு சந்தேகங்கள் இருந்து வந்தன என்றும் தலைவர் பிரபாகரன் மேடையில் அமர்ந்திருந்த வேளையில் உரையாற்றி மேற்படி சந்தேகங்களை தவிடுபொடியாக்கினார்.

மைதானத்தில் இருந்த மக்களின் பலத்த கரகோஷ ஒலிக்கு மத்தியில் தொடர்ந்து பேசும் போது நாம்எமது தாய் நாட்டை எதிர் நோக்கும் எந்த ஒரு சவாலுக்கு எதிராகவும் போராடுவதற்கு எந்த நேரமும் தயாராக உள்ளோம் என்றார். (ச)

## ஓமந்தை நோக்கி ஷெல் தாக்கு

தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் ஓமந்தைப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்த பயணிகளுக்கான சோதனை மேற்படி முகாமில் முடிவுற்றதும் இச் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது; இதனால் மிகுந்த பீதியின் மத்தியில் மக்கள் யாழ் நகர் நோக்கித் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். (ச)

மாட்டு

டீசல் வழங்க இராணுவம் தடை விதித்திருப்பதாலும், பொதுமக்கள் நிவாரணப் பொருள்களை பெறுவதில் பெரும் கஷ்டமடைந்துள்ளனர். (தி)

முத்தமிழ்

ஓவியங்கள், கைவினைப் பொருள்கள் ஆகியன பார்வைக்கு வைக்கப்பட உள்ளன. இந்தக் கண்காட்சி எதிர்வரும் 15ஆம் திகதிவரை மதியம் 12 30 மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாண்டிக்குளத்தில்

மேற்படி நபர் தாண்டிக்குளம் சிறிலங்கா தடை முகாமில் வைத்து சோதனையிடப்பட்டபின் வடக்கு செல அனுமதிக்கப்பட்டார். முகாமிலிருந்து முந்நூறு மீற்றர் தூரம் வந்ததும் பற்றை மறைவில் நின்ற இரண்டு சிப்பாய்கள் இவரை அழைத்து மறைவிடத்தில் வைத்து இவரிடம் இருந்த எண்ணாயிரம் ரூபாவைப் பறித்தெடுத்தனர். தன் பின்னால் வந்த வேறு சிலரும் இவ்வாறு இராணுவத்தினரால் அழைக்கப்பட்டதாகவும் இவர்களிடமும் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாம் எனவும் மேற்படி இளைஞர் தெரிவித்தார். (ச)

காரைநகரில்

மூலம் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக மானிப்பாயில் இருக்கும் அவரது மற்றுமொரு உறவினர் தெரிவித்தார். (ச)

## பனை முறிந்து வீட்டில் வீழ்ந்ததில் இருவர் காயம்

(மானிப்பாய்)

பனை மரம் முறிந்து வீட்டின் மேல் வீழ்ந்ததினால் வீட்டிலிருந்த சிறுவனும் யுவதியும் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை வீசிய சோழகக் காற்றினால் மாசியப்பிட்டியில் உள்ள விஜயரட்னம் என்பவரின் வீட்டின் பின் புறம் நின்ற பனைமரம் முறிந்து அவரது வீட்டின் மேல் வீழ்ந்தது இதனால் இவரது வீட்டுக் கூரை வீழ்ந்ததில் வீட்டிலிருந்தவிஜயரட்னம் திரேசா (வயது 26) என்பவரும் அயலவரான குணசிங்கம் வசந்தராசா (வயது 6) என்பவரும் படுகாயம் அடைந்தார்;

இவர்கள் இருவரும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின் அங்கிருந்து யாழ். போதனாவைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். (ச)

கச்சேரியடியில்

## அனாதரவான நிலையில் மூன்று குழந்தைகள்!

(யாழ்ப்பாணம்)

ஐந்து வயதிற்குட்பட்ட மூன்று குழந்தைகள் அனாதரவான நிலையில் காணப்பட்டனர்.

இம் மூன்று குழந்தைகளும் நேற்று மாலை 2-00 மணியளவில் கச்சேரியடிபிரதான வீதியில், அனாதரவான நிலையில தாய் தந்தையரைக் காணாது தவித்துக்கொண்டு நின்றனர். றோசிக்கா (வயது 5), றஜிஎன் றஜந்தன் ஆகிய இம் மூவரில் வயதில் மூத்தவரானறோசிக்கா தமது "அம்மா போய்விட்டார்" என்றும், தமது தந்தையின் பெயர் ராதா என்றும் அவர் மேசன் வேலை செய்பவர் என்றும் கூறுகிறார்;

இம் மூன்று குழந்தைகளும் தற்பொழுது கச்சேரியடி அன்னக்கிளி ஹோட்டலில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை

20 ஆம் திகதி சவூதிஅரேபியாவில் காரில் சென்று கொண்டிருந்த சமயம் இடம் பெற்ற விபத்தில் இறந்தார்; இவரது சடலம் இம்மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டது. (தி)

இடம் பெயர்ந்தோருக்கு

அட்டை வைத்திருக்கும் இடம் பெயர்ந்தோர்க்கு 10ஆம் 11 ஆம் 12ஆம் புள்ளிகளுக்கே மேற்படி நிவாரணம் வழங்கப்படுகிறது. பொதுமக்களின் நன்மைகருதிஇம்முறை 10 ஆம் 11 ஆம் இலக்கங்களுக்கான நிவாரணம் ஒரே தடவையில் வழங்கப்படும்.

தொழில் பாதிப்புற்ற மக்களின் "அ" நிவாரண அட்டைக்கு இம் மாதம் 8 ஆம் இலக்கம் புள்ளிக்கு மட்டும் ஒரு நிவாரணம் வழங்கப்படும்.

"உ" அட்டை வைத்திருக்கும் ஆயிரத்தி ஐநூறு ரூபாவிற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோருக்கு 8ஆம் இலக்க புள்ளிக்கு பொருள்கள் வழங்கப்படும். இவர்கள் இப்பொருள்களுக்குரிய பணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி ஜூன் மாதத்திற்கு "இ" அட்டைக்கு 3 கட்டமும் "அ", "இ" அட்டைகளுக்கு ஒரு நிவாரணமும் வழங்கப்படும என யாழ் செயலக நிவாரணப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தீவுப்பகுதி மக்களுக்கான நிவாரண கொடுப்பனவுகளில் "உ" அட்டை வைத்திருப்பவர்களுக்கு மாதத்தில் ஒரு முறை பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் உலர் உணவு பொருள்களும் "இ" அட்டை வைத்திருப்பவர்களுக்கு மாதத்தில் மூன்றுமுறை இலவச உலர் உணவு கொடுப்பனவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச) (88)

ஐரோப்பிய

இது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ராஜீவ்காந்தியைக் கொன்றதாகப் புலிகளைக் கூறுவதன் மூலம் இந்திய இராணுவத்தின் உதவியைப் பெற இலங்கை முயல்வதாகவும் குற்றம் சாட்டினார். இந்தியாவும், ஐரோப்பிய நாடுகள் சிலவும் மத்தியஸ்தராக இருந்தால் மட்டுமே இப் பேச்சுவார்த்தை சாத்தியம் ஆகும் என்றார் திலகர்.

மேலும் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறும் போது ஐக்கிய நாடுகள் சபை போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க வேண்டுமெனவும், இலங்கை அரசு போரைநிறுத்த தாது இயக்கம் எடுத்த நிலைப்பாடு இது என்றும் அவர் கூறினார்.

கடந்த வருடம் ஜூன் பதினோராம் திகதி இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தை முறிந்து போர் தொடங்கிய ஓராண்டு நிறைவையொட்டி புலிகள் இயக்கம் விடுத்த செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது;

அதேவேளை திலகரின் இப் பேட்டி தொடர்பாகக் கருத்துக் கூற சிறிலங்கா அரசாங்கம் மறுத்துவிட்டது.

பல்லாயிரக்

திறப்புரை நிகழ்ச்சியில் வடமராட்சிப்பகுதியின் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. அ. துரைராஜா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து -கேள்வி பதில் எனும் தலைப்பிலான கவியரங்கு வாத்திய விருந்து, குழுப்பாடல் நிகழ்ச்சி, விடிவை நோக்கி என்ற நாட்டிய நாடகம், போர்க்காலப் பாடல்கள் மெல்லிசை நிகழ்வு என்பன இடம்பெற்றன. (மு)

## மகிழ்ச்சி பிரவாகத்தில் 5ஆம்நாள் முத்தமிழ் விழா

(நமது நிருபர்)

தேசியத் தலைவர் வே பிரபாகரன் கலந்து கொண்ட முத்தமிழ் விழாவின் ஐந்தாவது நாள் நிகழ்ச்சி மிகவும் மகிழ்ச்சி ஊட்டும் நிகழ்ச்சியாக மக்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கலந்து கொண்டனர்.

இன்று தமிழீழ தேசிய விருது வழங்கும் வைபவத்தில் தலைவர் பிரபாகரன் கலந்து கொள்வார் என ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டபோது இந்நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த சாவகச்சேரி மகளிர் கல்லூரி மைதானத்தினுள் வீதியில் நின்ற மக்கள் வாயில் கதவை இடித்துக்கொண்டு உள்ளே ஓடிவந்தனர். வீதியில் கச்சான் வியாபாரம் செய்துகொண்டிருந்தவர்களும் ஐஸ்பழ வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களும் அவற்றை அந்தந்த இடத்திலேயே போட்டுவிட்டு மைதானத்திற்குள் ஓடிவிட்டனர், அயலவர வீடுகளில் இருந்த மக்கள் தமது வேலைகளையும் வீடுகளையும் திறந்தபடியே விட்டுவிட்டு உடுத்த உடைகளுடன் வந்துநின்ற காட்சியை காணக்கூடியதாயிருந்தது;

இச்சமயம் கவரேறிக் குதிக்க முயன்ற இளைஞர் ஒருவரை அங்கு காவலில் நின்ற புலிகள் பிடித்தபோது 'என்னைப் பிடியுங்கோ, ஆனால் ஒருமுறை தலைவரை பார்க்க விடுங்கள்' என்று மன்றாட்டமாக கேட்டபோது அவர் உடனடியாக விடுவிக்கப்பட்டார். அடுத்த கலை நிகழ்ச்சிக்காக அலங்கரித்து நின்ற பெண்கள் கட்டிய சலங்கையுடன் ஓடிவந்தனர்;

இதேவேளை அந்த நிகழ்ச்சி முடிந்த பின்னர் ஓடிவந்த சிலர் மூச்சுத்திணற ஏமாற்றத்தில் நின்ற காட்சி அவர்களை பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது.

## காலை இழந்த புளொட் உறுப்பினர் தற்கொலை

(வவுனியா)

வவுனியாவில் மிதிவெடியில் சிக்கி காலை இழந்த புளொட் உறுப்பினர் ஒருவர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்,

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, வவுனியா மாவட்டத்தில் உள்ள கொக்குவெலிச்சந்தி இராணுவ முகாமில் உள்ள காவல் அரணிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரும் புளொட் உறுப்பினர்களும் தொச்சிதோட்டப் பக்கமாக முன்னேற முயன்றனர். சுமார் 500 யார் வரை முன்னேறி வருகையில் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி ஒரு புளொட் உறுப்பினர் காலை இழந்தார்; அதனையடுத்து அந்த புளொட் உறுப்பினர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது பெயர் விபரம் இதுவரை வெளிவரவில்லை; இச்சம்பவம் கடந்த 10ஆம் திகதி இடம் பெற்றது.

மட்டக்களப்பில்

இராணுவத்தினர் மேலும் முன்னேற முடியாது அவ்விடத்திலேயே தரித்துள்ளனர்,

இதே தினம் பகல் பன்னிரெண்டு முப்பது மணியளவில் புலிபாய்ந்தகல் என்னும் இடத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறி முன்னேறிக்கொண்டிருக்கும்போது வடிசல் என்னும் இடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் இராணுவத்தினர் அதே இடத்திலேயே தரித்துள்ளனர்.

இதேபோல் காலை பதினொன்று முப்பது மணியளவில் வாகனேரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேறி வரும்போது முறித்தானைப் பள்ளம் என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்கி அங்கேயே நிறுத்தி வைத்தனர்;

இந்த மூன்று தாக்குதல்களிலும் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

இணக்கம் இல்லாவிடில்

விட்டால் அரசாங்கம் மாற்று வழி ஒன்றைநாட இருப்பதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவல்தெரிவிக்கப்பட்டது எதிர்வரும் இருபத்திநான்காம் திகதிக்கு இடையில் அனைத்துக்கட்சி மாநாட்டின்மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவொன்று காணப்படாது விட்டால் அரசாங்கம் மாற்று அரசியல்வழியொன்றை நாடவிருப்பதாக அவர் தெரிவித்தார்

அத்துடன் தமிழ் சிங்கள மொழிகளை அரச கரும மொழிகளாக அமுல் படுத்தல் தொடர்பாகக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மருந்து விலை அதிகரிப்பு

இலங்கையின் நாணயப் பெறுமதி இறக்கத்தால் மருந்துகளின் விலை கணிசமானளவு அதிகரித்துள்ளது.

உலகச் சந்தையில் இலங்கை நாணயத்தின் பெறுமதிவீழ்ச்சியடைவதால் இலங்கை கொள்வனவு செய்யும் மருந்துகளுக்கு அதிகளவு பணத்தினைச் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கையில் மருந்துகளின் விலை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

இதனால் மருந்துகளுக்குப் பெருந்தட்டுப்பாடுநிலவுகிறது. மக்களில் பெரும்பாலானவர்கள் வைத்தியர்களால் வெளியில் வாங்குமாறு சிபாரிசு செய்யும் மருந்துகளைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது. இவ்வாறு சண்டே ரைம்ஸ் பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது; (ச)

தேசியப் பற்றை

ளது இந் நிலைக்குக் காரணம் எமது பிள்ளைகள் மத்தியில் தேசியப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று வளரக்கூடிய கல்வியை நாம் ஊட்டாததேயாகும்; எனவே எமது தேசியப்பற்று வளரக்கூடிய கல்வியை நாம் ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் வடமராட்சி மக்கள் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் அரசண்ணா திறப்புரை நிகழ்த்தினார். (ச)

பாஷையூர்

மையில் திருநாட்திருப்பலியும் இடம்பெறுமென ஆலய உதவி பங்குத் தந்தை அருட்திரு தவராசசிங்கம் தெரிவித்துள்ளார். (43)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.